பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 05 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** **பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்.**

**2.** **நடப்பாண்டில் 14 கரீஃப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதற்கு, வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.**

**3.** **மூன்றாவது கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் 16 மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.**

**4.** **இந்திய கப்பல் மீது ஓமன் நாட்டு கடற்பரப்பில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.**

**5.** **ஆசிய பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அஜித் நாராயணா வெண்கலப்பதக்கம் வென்றார்.**

**- இனி விரிவான செய்திகள் - -**

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு **Sergey Lavrov,** ஈரான் அமைச்சர் திரு **Abbas Araghchi,** தென்னாப்பிரிக்க அமைச்சர் திரு **Ronald Lamola,** பிரேசில் அமைச்சர் **Mouro Vieira** ஆகியோர் பிரதமர் திரு நரேந்திர மோடியை இன்று சந்தித்து பேசினர்.

பிரிக்ஸ் மாநாட்டையொட்டி, உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் புதுதில்லி வந்துள்ளனர்.

இக்கூட்டத்தில் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், உலகளாவிய அரசியல் ஸ்திரத்தன்மைக்கு அமைதியும், பாதுகாப்பும் அவசியம் என்று கூறினார்.

மேற்காசியா உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற மோதல்கள் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தையும், அரசியல் ரீதியான அணுகுமுறையையும் நமக்கு உணர்த்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாட்டிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழில்நுட்ப மேம்பாடு, அதன் பரிமாணத்தை மாற்றியமைப்பதாக அவர் கூறினார்.

சிறந்த அரசு நிர்வாகம் மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சியை உறுதி செய்வதன் மூலம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாதத்துக்கு எதிரான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

உலகில் தற்போது நிலவிவரும் மோதல்கள், பொருளாதார பிரச்சினைகள், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப சவால்கள், பருவநிலை மாற்றங்கள் உள்ளிட்டவை உலகில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அமைந்துள்ளதாகவும், இதனை சமநிலைப்படுத்த பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

நடப்பாண்டில் 14 கரீஃப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதற்கு, வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு

2 ஆயிரத்து 369 ரூபாயிலிருந்து, 2 ஆயிரத்து 441 ரூபாயாக உயர்த்தியுள்ளதையும் குறிப்பிட்டார்.

சோளம் குவிண்டாலுக்கு 4 ஆயிரத்து 23 ரூபாயாகவும், கம்பு 2 ஆயிரத்து தொள்ளாயிரம் ரூபாயாகவும், மக்காச் சோளத்திற்கு 2 ஆயிரத்து 410 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

துவரம் பருப்புக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 8 ஆயிரத்து 450 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளதையும் அவர் குறிப்பிட்டார்.

பருத்திக்கான ஆதரவு விலையும் 8 ஆயிரத்து 267 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதால், விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்தியா — பிலிப்பைன்ஸ் இடையேயான தீவிரவாத தடுப்புக்கான இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் இன்று மணிலாவில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில், இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை இணைச்செயலர் டாக்டர் வினோத் **Vahade**-வும், பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை உதவிச்செயலர் **Marshal Louis Alferez**-ம் கலந்துகொண்டனர்.

தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை ஒழிக்க உறுதியான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பஹல்காமில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டம் தெரிவிக்கப்பட்டது.

மண்டல அளவிலும், உலக அளவிலும் தீவிரவாத த்துக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு தருவதாக பிலிப்பைன்ஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

<<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின் மூன்றாவது கட்டம் **16** மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், அருணாச்சலப்பிரதேசம், ஹரியானா, ஜார்கண்ட், கர்நாடகா, மகாராஷ்ட்ரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ஒடிஷா, பஞ்சாப், சிக்கிம், திரிபுரா, தெலங்கானா, உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களிலும், தில்லி மற்றும் புறநகர் பகுதிகள், சண்டிகர், **Dadra Nagar Haveli** மற்றும் **Daman Diu** யூனியன் பிரதேசங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெறவுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியுடன், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

இந்திய கப்பல் மீது ஓமன் நாட்டு கடற்பரப்பில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வர்த்தக கப்பல்கள் மற்றும் பயணியர் கப்பல்களை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடைபெறுவதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளார்.

இந்த கப்பலில் இருந்த அனைத்து மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளதாகவும், அவர்களை மீட்ட ஓமன் நாட்டு அதிகாரிகளுக்கு இந்தியா நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு ஜே சி டி பிரபாகருக்கு, மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பேரவைத் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு ஜே சி டி பிரபாகர் தலைமையில் சட்டப்பேரவையில் ஜனநாயக மாண்புகள் வலுப்பெற்று, பேரவையின் மரபுகள் காக்கப்படும் என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய அரசின் நேரடி ஆதார் சேவை மையம் இன்று விழுப்புரத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், புதிதாக விண்ணப்பிப்போருக்கு ஆதார் அட்டைகள் விரைந்து கிடைக்க வழி ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

***(Voice Byte — சுரேஷ் — 41 Sec. )***

புதிதாக தொடங்கப்பட்டுள்ள ஆதார் மையத்தின் சேவைகள் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

*(Sound Byte — பயனாளி - 20 Sec. )*

<<<<<<>>>>>

சிக்கிம் மாநிலத்தில் உள்ள அரசு ஊழியர்களில் 50 சதவீதம் பேர் வீட்டில் இருந்தே பணியாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துத் துறைகளுக்கும் அம்மாநில முதலமைச்சர் திரு பிரேம் சிங் தமாங் உத்தரவிட்டுள்ளார்.

தலைநகர் கேங்டாக்கில் உயரதிகாரிகளுடன் நடத்திய கூட்டத்திற்குபின் இந்த சிக்கன நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதிகாரிகள் வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள ஓராண்டுக்கு தடை விதிக்கப்படுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

சனி, ஞாயிற்றுக் கிழமைகள் முழு விடுமுறை நாளாக கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒற்றை இலக்க மற்றும் இரட்டை இலக்க வாகனங்களை தினசரி மாற்றி அனுமதிக்கும் நடைமுறையை அனைத்து மாவட்டங்களிலும் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அரசு வாகனங்களை பயன்படுத்தி, ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கோ, வெளி மாநிலங்களுக்கு செல்லவோ அதிகாரிகளுக்கு அனுமதி இல்லை என்றும் சிக்கிம் முதலமைச்சர் திரு பிரேம் சிங் தமாங் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

ஆசிய பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அஜித் நாராயணா வெண்கலப்பதக்கம் வென்றார்.

குஜராத்தின் காந்தி நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 71 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

தாஷ்கண்டில் நடைபெற்றுவரும் ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியில், 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர்

பிரிவில் இந்தியா 7 தங்கம், 2 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்று முதலிடத்தை பிடித்தது.

ஆடவர் பிரிவில் 2 தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலப்பதக்கங்களை வென்று மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

--------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

தரம்சாலாவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது

-------------

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shriyanshi Valishetty, காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 23-21 என்ற செட் கணக்கில், தைவானின் Yuan Chi Liao-வை வென்றார்.

இப்போட்டியில் **Tushar Suveer, Ashmita Chaliha** ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**